# சாத்தான் உங்களுக்குக் கடினமான நேரத்தைத் தரும்போது (4:1-7)

*பூமி என்ற இந்தக் கோளத்தில் சாத்தான் நன்றாகவே வாழ்கின்றான்.[1] "உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடித் சுற்றித்திரிகிறான்" (1 பேது. 5:8).*

*வெளி. 12ல் பிசாசானவனைப்பற்றிய உருவகமும், அவனுடைய நோக்கங்களும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இவ்வதிகாரம் கர்ப்பவதியான ஒரு பெண் மற்றும் சிவப்பான பெரிய வலுசர்ப்பத்தின் காட்சியுடன் தொடங்குகின்றது. அந்தப் பெண்ணின் குழந்தை பிறந்தவுடன் அதைப் பட்சித்துப் போடும்படி அந்த வலுசர்ப்பம் நின்றது. அந்த வலுசர்ப்பம் வசனம் 9ல் பிசாசு என்று அடையாளப் படுத்தப்படுகின்றது; அந்தக் குழந்தை கிறிஸ்துவாயிருக்கிறார்.[2] வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இயேசு பிறந்தது முதலே அவரை அழிப்பதே பிசாசின் நோக்கமாயிருந்தது. பச்சிளம் குழந்தைகளை ஏரோது கொலை செய்வித்ததிலிருந்து சிலுவை வரையிலும் சாத்தானுடைய கொடூரமான முயற்சிகளை சுவிசேஷ நூல்கள் நமக்குக் கூறுகின்றன. இருப்பினும் இயேசுவை அழிக்கும் முயற்சியில் சாத்தான் தோல்வியடைந்தான். வெளி. 12:5ல் அந்தக் குழந்தை "தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது" என்று குறிப்பிட்டுள்ளது - இது இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதற்கான ஒரு குறிப்பாகும். அந்த வலுசர்ப்பம் குழந்தையைப் பிடிக்கப் பின்பற்றிச் செல்ல முயன்றது, ஆனால் அது பூமியிலே விழத் தள்ளப்பட்டது. அப்பொழுது அது அந்தப் பெண்ணின்மீது தனது கோபத்தைக் காட்ட முயற்சித்தது, ஆனால் தேவன் அப்பெண்ணைப் பாதுகாத்தார்-இவ்விதமாக, "வலுசர்ப்ப*

மானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ் துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய, அவளு டைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப் போயிற்று" (வெளி. 12:17). "தேவனுடைய கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களும்'' கிறிஸ்தவர்கள் ஆவார்கள்! பிசாசானவனால் இயேசுவை அழிக்க முடியாமல் போனதால், அவன் இப்பொழுது உங்களையும், என்னையும் அழிக்க விரும்புகின்றான்!

சபையை அழிக்கச் சாத்தான் எடுத்த முயற்சிகளின் தொடக்கத்தைப்பற்றி இப்பாடம் கூறுகின்றது.[3] ஆரம்ப நிலையிலிருந்த சபை சமாதானத்திலும், அமைதியிலும் மகிழ்ந் திருந்தது, ஆனால் அது "புயலுக்கு முற்பட்ட அமைதியாய்" இருந்தது. தேவனுடைய மக்களை பிசாசானவன் ஒரு பொழுதும், நெடுநாட்களுக்குத் தனியாய் விட்டு விடுவதில்லை.

நமது முந்தைய பாடத்தில் நாம் அப். 3ன் படிப்பை முடித் தோம். உணர்வுப் பூர்வமாகப் பொங்கி எழுந்த ஒரு கூட்டம் கூடியபோது, அவர்களுக்குப் பேதுரு நற்செய்தியைப் பிரசங் கித்தார். திடீரென அவரது பிரசங்கம் நிறுத்தப்பட்டது, கிறிஸ் தவர்களுக்கு முதலாவது உபத்திரவம் தொடங்கிற்று. இந்தப் பாடத்திலும், இனி வரும் இரண்டு பாடங்களிலும், இவ்விரு அப்போஸ்தலர்கள் எவ்விதம் பதில்செயல் செய்தனர் என்று நாம் பார்க்க விரும்புகின்றோம், அதன் மூலம், "சாத்தான் நமக்குக் கடினமான நேரத்தைத் தரும்போது" நாம் எவ்விதம் பதில்செயல் செய்ய வேண்டும் என்பதை நாம் காண்போம்.

## வியப்படைய வேண்டாம் (4:1-3)

''கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று பவுல் கூறினார் (2 தீமோ. 3:12). பேதுரு, "... உங்கள் நடுவில் பற்றி யெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" என்று கூறினார் (1 பேது. 4:12). உபத்திரவங்கள் வரும்போது நாம் வியப்படையக் கூடாது.

*இயேசு சீஷர்களிடத்தில், "... என் நாமத்தினிமித்தம்[4] அவர்கள் உங்களைப்பிடித்து, ஜெப ஆலயங்களுக்கும் சிறைச் சாலைகளுக்கும் ஒப்புக் கொடுத்து ... உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள் ... என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்" என்று எச்சரித்திருந்தார் (லூக். 21:12, 17; மேலும் மத். 10:17, 18; யோவா. 15:18-16:4). உபத்திரவம் வருமா? என்பது இங்கு கேள்வியல்ல; எப்பொழுது வரும்? என்பதே கேள்வியாகும். பேதுருவும் யோவானும் இடை மறிக்கப்பட்டபோது இக்கேள்விக்குப் பதில் தரப்பட்டது.*

> *அவர்கள் ஜனங்களுடனே பேசிக் கொண்டிருக்கையில், ஆசாரியர்களும் தேவாலயத்துச் சேனைத் தலைவனும், சதுசேயரும் அவர்களிடத்தில் வந்து, அவர்கள் ஜனங் களுக்கு உபதேசிக்கிறதினாலும், இயேசுவை முன்னிட்டு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறதி னாலும், சினம் கொண்டு, அவர்களைப் பிடித்து, சாயங்காலமாயிருந்தபடியினால், மறுநாள் வரைக்கும் காவலில் வைத்தார்கள் (வ. 1-3).*

*அப்போஸ்தலர்களைக் கைது செய்தவர்கள் எருசலேமி லிருந்த மார்க்க, அரசியல் மற்றும் சமுதாயத் தலைவர்கள் ஆவார்கள். அவர்கள் அந்நகரின் அதிகாரத்துவப் பிரதிநிதிகள் ஆவார்கள்!*

*"ஆசாரியர்கள்" என்பது (வ. 23)[5] "பிரதான ஆசாரியர்களின்." வழிவந்த எல்லா "பிரதான ஆசாரியருடைய குடும்பத்தார் யாவரும்" ஒரு குழுவாக இருக்க வேண்டும் (வ. 6), மற்றும் தேவாலயப் பணிகளில்[6] பொறுப்புள்ள ஆசாரியர்களும் அதில் இருக்க வேண்டும். "தேவாலயத்துச் சேனைத் தலைவன்" என்பது தேவாலயத்துப் பாதுகாப்பிற்குப் பொறுப்பாளர் ஆவார்[7]; அவர் அதிகாரத்தில் பிரதான ஆசாரியருக்கு அடுத்த வராக இருந்தார். "சதுசேயர்கள்"[8] என்பவர்கள் தேவாலயத் தையும் பலஸ்தீனத்தையும் கட்டுப்பாடு செய்த ஒரு சிறிய ஆனால் வல்லமையுள்ள வகுப்பினர் ஆவர். பிரதான ஆசாரியர் ஒரு சதுசேயராக இருந்தார்; சனதெரீன் சங்கத்தில் அநேகர் சதுசேயராயிருந்தனர் (5:17). சதுசேயர்கள் ரோமாபுரியோடு ஒத்துழைக்க விருப்பமுள்ளவர்களாய் இருந்ததால், அவர்கள்*

நாட்டில் இருந்த மிகுந்த வல்லமையுள்ள அரசியல் குழுவாகவும் இருந்தனர். பிசாசானவன் சபைக்கு உபத்திரவம் கொடுக்கத் தொடங்கிய போது உடனடியாக அவன் "முதல் குழுவை அனுப்பினான்."

உபத்திரவம் என்பது "நகரின் மிக நேர்த்தியான குழுவிடம்" இருந்து, மார்க்கத் தலைவர்களிடமிருந்து, சபை உறுப்பினர் களிடமிருந்து கூட (2 கொரி. 11:26) வர முடியும்! சாத்தான் யாரை வேண்டுமானாலும் பயன்படுத்துவான், அவனால் அது முடியும் (மத். 16:23).

உபத்திரவத்திற்கான காரணங்கள் நம்மை வியப்படையச் செய்யக் கூடாது. பேதுருவும் யோவானும், தேவன் அல்லது மனிதருடைய எந்தச் சட்டத்தை மீறினார்கள்? எதையும் அல்ல. அவர்கள் ஒரு மனிதனைக் குணமாக்கி ஒரு பிரசங்கம் செய்தனர், அவ்வளவே. ஆயினும் அந்நாட்களில்[9] இருந்த அதிகார வர்க்கத்திற்கு ஒரு பயமுறுத்தலை அவர்கள் முன் வைத்தனர். அப்போஸ்தலர்களின் ஊழியம், அதிகாரத் தரகர் களை மூன்று அம்சங்களில் கலங்கச் செய்தது:

(1) பேதுருவும் யோவானும் "மக்களுக்கு போதித்துக் கொண்டிருந்தனர்." பேதுருவும் யோவானும் மக்களுக்கு போதித்தனர் என்ற உண்மையை அவர்கள் விரும்பவில்லை; அந்த சிலாக்கியத்தை அவர்கள் தங்களுக்கென்று மட்டும் தற்காத்துக்கொள்ள விரும்பினர். எல்லாவற்றிற்கும் மேலாக, பேதுருவும் யோவானும் போதித்த விஷயங்களை அவர்கள் விரும்பவில்லை; மற்ற விஷயங்களோடு கூட, அவர்கள் மேசியாவைக் கொலை செய்ததாக அப்போஸ்தலர்கள் குற்றம் சாட்டினார்கள் (3:14, 15)!

(2) பேதுருவும் யோவானும் "இயேசுவை ... அறிவித்துக் கொண்டிருந்தனர்." ரோமர்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தபோது, யூதர்கள் ஒரு தொந்தரவுக்காரனைத் தாங்கள் முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டதாக எண்ணினர், ஆனால் இப்பொழுதோ இயேசு தாம் உயிரோடிருந்த காலத்தைக் காட்டிலும் அதிகமான சீடர்களைப் பெற்றிருந்தார்!

(3) பேதுருவும் யோவானும் "மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுதல் இயேசுவுக்குள் இருப்பதாக அறிவித்தனர்." அவர்கள், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததைப் பிரசங்கித்தது

*மட்டுமின்றி, மற்றவர்களும் இயேசுவுக்குள் இருக்கும்போது மரித்தாலும் உயிர்த்தெழுப்பப்படக்கூடும் என்று அறிவித்தனர்![10] சில விஷயங்கள் சதுசேயர்களை அதிகமாய்க் கலங்கச் செய்தன![11] அவர்கள் உயிர்த்தெழுதலை நம்புவதில்லை; அவர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளை நம்புவதில்லை. (நாம் விவாதித்துக் கொண்டிருக்கும் பிசாசானவனை அவர்கள் நிச்சயமாக நம்புவதில்லை!) பேதுருவும் யோவானும் எந்த சட்டத்தையும் மீறாதிருந்தும், அப்பொழுது இருந்த நிலையை அவர்கள் இடறல் படுத்தினர், இது ஒரு பெரிய முடிவைக் கொண்டுவரக் கூடும்!*

*சில வேளைகளில், கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நாம் நன்மை செய்கையில், சாத்தான் நமக்குக் கடினமான நேரத்தைக் கொடுப்பதுபற்றி நாம் வியப்படைகிறோம். ‘‘நாங்கள் யாரையும் துன்பப்படுத்தவில்லையே!” என்று நாம் எதிர்க்கின்றோம். ‘‘கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்” என்று பவுல் கூறினார் (2 தீமோ. 3:12). இயேசு “நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்தார்” (10:38), ஆனாலும் அவர் சிலுவையிலறையப் பட்டார்.*

*மேலும், சிலர் தேவனுடைய வசனத்தை[12] தாங்கள் விசுவாசித்து போதிக்கும்போது கண்டனம் பண்ணப்படுவதுபற்றி வியப்படைகின்றனர். இதைப்பற்றி சந்தேகப்பட வேண்டாம்: நாம் நல்லமுறையில் வாழ்ந்து தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிக்கும்போது, சாத்தானால் அதைத் தாங்க முடியாது! நமது சாட்சியத்தை ஒன்றுமற்றதாக ஆக்க அவன் பல வழிகளில் முயற்சி செய்வான். அதை சிந்தனையில் வையுங்கள்!*

*யூதத் தலைவர்கள் பேதுருவையும் யோவானையும் கைது செய்தபோது, மறுநாள் வரை அவர்களைச் “சிறையில் அடைத்தார்கள்.’’[13] ஏனென்றால் ஏற்கனவே அது மாலை நேரமாயிருந்தது.[14] அவர்கள் சட்டப்பூர்வமான சில தேவைகளுக்காக[15] மறுநாள் வரை காத்திருக்கலாம்; இவ்விஷயத்தை எப்படிக் கையாள்வது என முடிவு செய்யக் கால அவகாசத்தை அவர்கள் விரும்பியிருக்கலாம் (அப்போஸ்தலர்கள் தவறு எதுவும் செய்யவில்லையே!); அல்லது அதிகாரத்தை எதிர்ப்பது என்றால் அதன் பலன் என்னவாயிருக்கும் என்பதை அப்போஸ்தலர்கள்*

ருசி பார்க்கும்படி ஓரிரவு அவர்களைச் சிறையில் அடைத்து வைக்க விரும்பியிருக்கலாம். பேதுருவையும் யோவானையும் கைது செய்யும்படியான முகாந்திரம் எதுவும் அவர்களுக் கில்லை, அவர்களைச் சிறையில் அடைக்கவும் காரணம் எதுவும் இல்லை (வசனம் 21ஐக் கவனியுங்கள்), ஆனால் இயேசுவை மரணத் தீர்வைக்கு உட்படுத்தியிருந்த அவர்கள் இவ்வித "நுட்பங்கள்" பற்றி அதிகமாய் ஒன்றும் கவலைப்படவில்லை.

## உங்கள் கரங்களைத் தூக்கியெறிந்து விடவேண்டாம்[16] (4:4-6)

சாத்தான் கடினமான நேரத்தை நமக்குக் கொடுக்கும்போது நம்மில் சிலர் மிகவும் தைரியமற்றுப் போகின்றோம்: "நாம் வெளியேறி விடுவது நல்லது! எதுவுமே சரியாக நடக்க வில்லையே!" இதைக் கவனியுங்கள்: சாத்தான் நமது வாழ்வைக் கடினமாக்குவான், ஏனெனில் நாம் தொடர்ந்து செயலாற்றி னால் கர்த்தருக்கென்று மாபெரும் செயல்கள் நடைபெறும் என்று அவன் அறிந்துள்ளான்! நான் பிரசங்கிக்கும்போது கைது செய்யப்பட்டுச் சிறையில் ஓரிரவைக் கழிக்க நேர்ந்தால், சுவிசேஷ ஊழியம் தோல்வியானது என்று எண்ணும்படி நான் சோதிக்கப்படக் கூடும். ஆயினும் பேதுருவின் பிரசங்கத்தின் விளைவைக் கவனியுங்கள்: "வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது" (வ. 4). இம்மக்கள் பேதுருவும் யோவானும் கைது செய்யப்பட்டதைப் பார்த்திருந்தனர், ஆனால் அது அவர்கள் கிறிஸ்தவர்களாவதைத் தடுத்து நிறுத்த வில்லை! செய்தியளித்தவர்கள் சிறையிலிடப்பட்டனர், ஆனால் செய்தி சிறையிலிடப்படவில்லை. தேவனுடைய வசனமானது நேர்மையான இருதயத்தில் இடப்படும்போது அது வல்லமையுள்ளதாகின்றது (லூக். 8:15; ரோமர் 1:16).

"விசுவாசித்தார்கள்" என்று வசனம் 4ல் கூறப்படுவது, இம்மனிதர்கள் வெறுமனே இயேசுவை மேசியா என்று விசு வாசித்த நிலையோடு நின்றுவிட்டனர் என்று பொருள்படாது. "விசுவாசம்" என்ற வார்த்தை "நம்பிக் கீழ்ப்படிதல்"[17] என்ற பரந்த பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நடபடிகள்

*நூலில்*[18] *ஒரு சில மனமாற்ற நிகழ்ச்சிகளே விரிவாகத் தரப் பட்டுள்ளன; எஞ்சியுள்ளவைகளில் வழக்கமாக "திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகி ..." (5:14) அல்லது "... அநேகரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள்" (6:7) என்பது போன்ற சுருக்கக் கூற்றுகளே தரப்பட்டுள்ளன. "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல" (10:34) என்பதால், வசனம் 4ல் குறிப்பிட்டுள்ளவர்கள், பெந்தெகொஸ்தே நாளில் மூவாயிரம் பேர் செய்தது போலவே மனந்திரும்பி ஞானஸ் நானம் பெற்றிருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் எதுவும் இருக்க முடியாது. இங்கிலாந்து சபையின் பாடப்புத்தகம் ஒன்று: "அதே சமயம், ஏறக்குறைய ஐயாயிரம் யூதர்கள், குணப்படுத்தப்பட்ட அற்புதத்தைக் கண்டு அல்லது கேட்டு, பேதுருவின் அறைகூவலை ஏற்று சபைக்குள் ஞானஸ்நானம் பெற்றனர்" என்று குறிப்பிடுகின்றது என்று* Bernard R. Youngman, *Spreading the Gospel என்ற நூலில் கூறினார்." அப். 3ல்,*[19] *"பேதுரு ஞானஸ்நானத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்காதிருந்தால் அவர்கள் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று எப்படி அறிந்திருப்பார்கள்? மக்கள் ஒவ்வொரு நாளும் ஞானஸ்நானம் பெற்றனர் (2:41, 47)! ஞானஸ்நானம் பெறுவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களின் கூட்டம் எருசலேமில் சாதாரணமான காட்சியாயிருந்தது! கிறிஸ்தவராக விரும்பும் எவரும் அதற்கான வழிமுறைகளை அறிய முடிந்திருந்தது.*

*வசனம் 4ல் "மனிதர்கள்" என்று மொழியாக்கப்பட்டுள்ள வார்த்தை (தமிழில் இது "அவர்கள்" என்றுள்ளது) பொதுப்பால் சொல்லான anthropos என்ற வார்த்தையிலிருந்து (ஆண்கள், பெண்களைக் குறிக்கும் வார்த்தை)*[20] *வந்ததல்ல. மாறாக அது "மனுஷியிலிருந்து வித்தியாசமான மனிதன்" எனப் பொருள் படும்* aner *என்ற குறிப்பிட்ட வார்த்தையிலிருந்து வந்ததாகும். "ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது" என்ற சொற்றொடரானது ஆண்களை மட்டுமே குறிப்பதாயிருப்பதால், அவர்கள் எல்லாரும்*[21] *எவ்வளவு பேர் இருந்திருப்பார்கள் என்பதை நாம் யூகம் செய்ய மாத்திரமே முடியும். அவர்கள் எல்லாரும் குறைந்தது பத்தாயிரம் பேராவது இருந்திருக்க வேண்டும்!*[22] *எரிகிற எண்ணெயில் தண்ணீரை ஊற்றினால் நெருப்பு பரவும்; சபையை அழிக்க சாத்தான் எடுத்த ஒவ்வொரு முயற்சியும்*

அதை பரவச் செய்வதையே விளைவாக்கிற்று!

ஆயினும், கைது செய்து, ஓரிரவு சிறையில் அடைக்கப்பட்ட தென்பது அப்போஸ்தலர்களின் சாட்சியத்தை ஒன்றுமற்ற தாக்கச் சாத்தான் செய்த முயற்சிகளின் தொடக்கமாகவே இருந்தது. அடுத்த நாள் காலையில், அப்போஸ்தலர்களுக் கெதிராக நடவடிக்கை எடுக்க ஒரு வல்லமையுள்ள குழு ஒன்று கூடிச் செயல்பாட்டில் இறங்கிற்று:

> மறுநாளிலே ஜனங்களுடைய அதிகாரிகளும், மூப்பரும் வேதபாரகரும் பிரதான ஆசாரியனாகிய அன்னாவும் காய்பாவும், யோவானும், அலெக்சந்தரும், பிரதான ஆசாரியருடைய குடும்பத்தார் யாவரும் எருசலேமிலே கூட்டங்கூடி (வ. 5, 6).

"அதிகாரிகள்" என்பவர்கள் "பிரதான ஆசாரியர்களாய்" இருந்தனர் (வ. 23). "மூப்பர்" என்பவர்கள் ஞானமும் பக்குவமும் உள்ளவர்கள் எனப் பெயர்பெற்ற வயதில் முதிர்ந்த தலைவர்களாயிருந்தனர். "வேதபாரகர்" என்பவர்கள் நியாயப் பிரமாணத்தில் விற்பன்னர்களாயிருந்தனர்.[23] இம்மூன்று குழுக் களும் இணைந்ததே சனதெரீன் என்ற ஆளுகை அமைப் பாகும்.[24] சனதெரீன் என்பது யூதர்களின் பாராளுமன்றமாகவும் (5:21) உயர் நீதிமன்றமாகவும் இருந்தது.[25] அன்று காலையில் பலஸ்தீனத்தின் இத்தனிச் சிறப்பு வாய்ந்த குழு, கலிலேயாவிலிருந்து வந்த இந்த மீன் பிடிப்பவர்களை என்ன செய்வது என்று முடிவெடுப்பதற்காக ஒரு சிறப்புக் கூட்டத்தைக் கூட்டியது!

அங்கு கூடியிருந்தவர்களின் பட்டியலைப் பார்க்கும் போது, சூழ்நிலையின் முக்கியத்துவம் புலனாகின்றது. "பிரதான ஆசாரியனாகிய அன்னா அங்கிருந்தார்." "பிரதான ஆசாரியன்" என்பது கௌரவமான ஒரு பட்டமாகும்.[26] அன்னா, முன்பு பிர தான ஆசாரியராயிருந்தவர். அநேக வருடங்கள் அவர் பிரதான ஆசாரியராக ஊழியம் செய்தபிறகு, அவர் ரோமானியர்களால் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டார். ஆயினும் அநேக யூதர்கள் அவரைப் பிரதான ஆசாரியராகவே கருதினர், அவர் பதவியின் பின்புற பலமாயிருந்தார்.[27] அன்னாவின் மருமகனாகிய காய்பா அப்போதைய பிரதான ஆசாரியராயிருந்தார் (மத். 26:57;

*யோவா. 18:13, 24). யோவானும், அலெக்சந்தரும் யாரென்பது நிச்சயமாகத் தெரியவில்லை, ஆனாலும் லூக்காவின் எழுத்துக் களை வாசிப்பவர்களுக்கு அவர்கள் செல்வாக்குள்ளவர்கள் என்பது தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் அன்னா அல்லது காய்பாவின் மகன்களாக இருக்கலாம், இவ்விதமாக அவர்கள் பிரதான ஆசாரியரின் வழி வந்தவர்களாயிருந்தனர்.[28] எவ்விதத்திலும் அவர்கள் "பிரதான ஆசாரியரின் வம்சா வழியின ராயிருந்தனர்." மேலும் லூக்கா, "பிரதான ஆசாரியருடைய குடும்பத்தார் யாவரும்'' அங்கிருந்தனர்[29] என்றும் குறிப் பிட்டார். எருசலேமிலிருந்த முக்கியமானவர்கள் யாரும் அங்கு இல்லாமலில்லை!*

*நாட்டின் வல்லமை வாய்ந்த இம்மனிதர்களுக்கு முன்பாக அழைக்கப்பட்ட பேதுரு அல்லது யோவானாக நான் இருந் திருந்தால், அச்சூழ்நிலையை நான் ஒரு அடக்குமுறையாகக் கண்டிருப்பேன். பேதுருவும் யோவானும் அந்தச் சூழ்நிலையை ஒரு வாய்ப்பாகக் கண்டனர். உபத்திரவங்களைப்பற்றி இயேசு தமது சீஷர்களுக்கு எச்சரிக்கை செய்கையில், "... அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெப ஆலயங்களுக்கும் சிறைச்சாலை களுக்கும் ஒப்புக் கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும் அதிபதி கள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள். ஆனாலும் அது உங்களுக்குச் சாட்சியாவதற்கு ஏதுவாயிருக் கும்'' என்று கூறியிருந்தார் (லூக். 21:12, 13). பேதுருவும் யோவானும் சனதெரீன் சங்கத்தாருக்குப் போதிக்க வேறு எவ்விடத்தில் வாய்ப்புப் பெற்றிருக்க முடியும்? அவர்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டுச் செல்வதே அவர்களுக்கிருந்த ஒரே வாய்ப்பாயிருந்தது!*

*நடபடிகள் நூலை நாம் தொடர்ந்து படிக்கையில் அதில் கிறிஸ்தவர் ஒருவர் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படும் ஒவ்வொரு வேளையும், அவர் தன்னைத் தற்காத்துக் கொள்ளப் பயன்படுத்தாமல், இயேசுவைப்பற்றி அறிவிக்கும் ஒரு வாய்ப் பாகவே பயன்படுத்தியுள்ளார் என்பதைக் காண்போம்!*

*சாத்தான் நமக்குக் கடினமான நேரத்தைத் தரும்போது, நாம் நமது கண்களைத் திறந்து வைத்திருந்தால் - நமது கரங்களைத் தூக்கியெறிந்து விடாதிருந்தால் - இதற்கு முன் எப்போதும் பெற்றிராத ஒரு வாய்ப்பை நாம் காண்போம்.*

## சாத்தானின் சட்டங்களின்படி செயல்பட வேண்டாம் (4:7, 8)

வசனம் 5ல், ''மறுநாளிலே'' ஆலோசனை சங்கத்தார் யாவரும் எருசலேமிலே கூட்டம் கூடினார்கள் என்று கூறப்படுகிறது. அவர்களை (அப்போஸ்தலர்களை) மையத்தில் நிறுத்தியபோது, ''நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே இதை செய்தீர்கள்?" (வ. 7) என்று விசாரிக்கத் தொடங்கினர். அந்த அப்போஸ்தலர்களில் ஒருவராக உங்களைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். உங்களைச் சுற்றிலும் ஒரு அரைவட்ட வடிவில் எழுபத்தி ஒரு நியாயாதிபதிகள்[30] இருளார்ந்த உடையுடனும், எதிர்ப்புணர்வுள்ள முகங்களுடனும் அமர்ந்துள்ளனர். இவர்களைத் தவிர மற்றவர்களும் அதற்குச் சமமான எதிர்ப்புணர்வுடன் உள்ளனர்.[31] ஒவ்வொரு புறமும் நீதிமன்ற அலுவலர்கள் உள்ளனர். இவ்வித விரோத உணர்வுகள் யாவும் குவிந்துள்ள இடத்தில் மூன்று மனிதர்கள்- நீங்கள், மற்றொரு அப்போஸ்தலர் மற்றும் குணமாக்கப்பட்ட மனிதர்[32] - இருக்கிறீர்கள். அந்த அறை முழுவதிலும் நட்புணர்வுள்ள ஒரு முகம் - ஒரே ஒரு முகம்-தென்படுகிறதா என்று பார்க்கிறீர்கள் - ஆனால் ஒருவரும் இல்லை. பிறகு இயேசுவை மரணத்திற்குத் தீர்ப்பிட்டதும் இதே குழுதான் என்பதை நீங்கள் நினைவு கூறுகிறீர்கள்! அச்சூழ்நிலை அப்போஸ்தலர்களுக்குப் பயமுண்டாக்கும்படிக் கணக்கிடப்பட்டிருந்தது. நான் நிச்சயமாகவே பயமுறுத்தப்பட்டிருந்திருப்பேன்.

முறைப்படியான கூட்டம் தொடங்குகையில், இதற்கு முன்னால் என்ன நடந்திருக்கிறது என்று திரும்பக் காண நம் உணர்வுகள் எழும். விசாரணையானது குற்றச்சாட்டுகளை முறைப்படியாகப் படிப்பதில் தொடங்கியிருக்க வேண்டும். இதற்கு மாறாக, தெளிவற்ற ஒரு கேள்வியுடன் இது தொடங்கிற்று: "நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே, இதைச் செய்தீர்கள் என்று கேட்டார்கள்"[33] "இதை" என்பது எதைக் குறிக்கின்றது: குணப்படுத்துதலையா? பிரசங்கித்தலையா? அல்லது வேறு எதையுமா? அப்போஸ்தலர்களைப் பிடித்து வைப்பதற்கு அந்தப் புகழ்பெற்ற குழுவினரிடம் சட்டரீதியான காரணம் எதுவும் இல்லாதிருந்தது (வ. 21),

மற்றும் பேதுருவும் யோவானும் தற்காப்பற்ற பதில் ஒன்றைக் கொடுத்தால் அவர்களைத் தண்டிக்க அதையே காரணமாக் கலாம் என்று அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்தனர். இவ்வித மான நடைமுறையை நாம் இதற்கு முன் எங்கு சந்தித்துள் ளோம்? இயேசுவின் விசாரணையில்! (லூக். 22:66-71). பேதுரு மற்றும் யோவானின் "விசாரணையில்" நாம் அதே முகங்களை, அதே தப்பெண்ணத்தை, அதே மாய்மாலத்தை, அதே வரிசை யிலான வினாவுதலை நாம் காண்கிறோம்! யூதத் தலைவர்கள், அப்போஸ்தலர்களை அவர்களது செல்வாக்கிலிருந்து இழுத்து விடுவதற்குச் சுற்று வழியாக ஒரு நூலிழையாவது தருவார்களா என்று கெஞ்சிப் பார்த்தனர்! (ரிச்சர்ட் ரோஜர்ஸின் பிரசங்கத்திலிருந்து தழுவப்பட்டது.)

அந்தக் கேள்வி தெளிவற்றதாய் இருந்தாலும், அது மூன்று வலுவான வலைகள் உடையதாய் இருந்தது. முதலாவது அவர்கள், "நீங்கள் எந்த வல்லமையினாலே ... இதைச் செய்தீர் கள்?" என்று கேட்டனர். "வல்லமை" என்ற வார்த்தை "அற்புதங் கள்" என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டதாகும், இது "அற்புத வல்லமை" என்று மொழியாக்கம் செய்யப்பட முடியும். மோசேயின் பிரமாணத்தின்படி, மந்திரவாதம் என்பது மரணத்திற்கேது வான குற்றம் ஆகும். அப்போஸ்தலர்கள், தாங்கள் மந்திரவாதம் செய்வதாகக் குறிப்பிட்டிருந்தால், அவர்களை மரணத்துக் குள்ளாக்கியிருக்க முடியும்.

அடுத்து, ஆலோசனைச் சங்கத்தார், "எந்த நாமத்தினாலே இதைச் செய்தீர்கள்?" என்று கேட்டனர். "நாமம்" என்பது "அதிகாரம்" என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.[34] இயேசு சிலுவையிலறையப்படுவதற்குச் சில நாட்கள் முன்ன தாக, இதே மனிதர்கள் அவரிடத்தில் வந்து, "நீர் எந்த அதிகாரத் தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?" என்று கேட்டார்கள் (மத். 21:33). இப் பொழுது அவர்கள் அதே கேள்வியை அப்போஸ்தலர்களிடம் கேட்டனர். இவ்விரு நிகழ்ச்சிகளிலும், அவர்கள், "நாங்கள்தான் அதிகாரத்தில் உள்ளவர்கள். நீங்கள் அதிகாரம் பெற்றவர்கள் போல் செயல்பட எவ்வளவு தைரியம் உங்களுக்கு!" என்று மறைமுகமாகக் குறிப்பிட்டனர். அப்போஸ்தலர்கள், சட்ட

ரீதியற்ற அதிகார மூலத்தை எதையேனும் குறிப்பிடுவார்கள் என்று அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.

மூன்றாவது வலை மிகவும் நுட்பமானதும், சூட்சும மானதுமாகும். இது ஆங்கிலத்தில் மற்றும் தமிழ் மொழியாக்கங் களில் தவறவிடப்பட்டிருக்க முடியும். மூல வசனத்தில், “நீங்கள்'' என்ற வார்த்தை அதற்கு அழுத்தத்தைக் காட்டும் வகையில் வாக்கியத்தின் இறுதியில் உள்ளது. நீங்கள் இந்த வாக்கியத்தை வாசிக்கும்போது ''நீங்கள்'' என்ற வார்த்தை அழுத்தமாய்க் கூறப்பட வேண்டும்: “நீங்கள் எந்த வல்லமையி னாலே, எந்த நாமத்தினாலே, இதைச் செய்தீர்கள்?'' வேறு வார்த்தைகளில் சொல்லுவதானால், “எங்களைப் பாருங்கள், பிறகு உங்களையே பார்த்துக் கொள்ளுங்கள். எங்களுக்கும் எங்கள் அதிகாரத்திற்கும் சவால் விடும் வகையில் உங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று அவர்கள் கேட்டனர். அப்போஸ்தலர்கள் “படிப்பறியாதவர் களென்றும் பேதைமையுள்ளவர்கள் என்றும்'' அவர்கள் கருதினர் (வ. 13). பேதுருவையும் யோவானையும் அவர்கள் வினவுகையில் குரலில் ஒரு இகழ்ச்சியுணர்வு இருந்தது. கேள்வி களும், அவைகளை அவர்கள் கேட்ட விதமும் அப்போஸ்தலர் களின் கோபத்தைத் தூண்டுவதாக வடிவமைக்கப்பட்டிருந்தது. அதிகாரிகள் ''சொற்களின் மிகுதியால் பாவமில்லாமல் போகாது'' (நீதி. 10:19) என்ற நீதிமொழியை நினைவில் வைத்துக் கொண்டனர்.

சாத்தான் உங்களுக்குக் கடினமான நேரத்தைக் கொடுக்கும் போது, அவனுடைய சட்டங்களின்படி நீங்கள் செயல்பட வேண்டும் என்று அவன் விரும்புகின்றான். அவனைப் போலவே நீங்கள் பதில்செயல் செய்யும்படி அவன் விரும்பு கின்றான்; நீங்கள் தீமைக்குத் தீமையைத் திரும்பச் செய்யும்படி அவன் விரும்புகிறான். அவனுடைய சட்டங்களின்படி செயல்படுவதற்கு அவன் உங்களை உட்படுத்திவிட்டால், அவன் ஏற்கனவே பந்தயத்தில் ஜெயித்து விட்டான்!

நான் அங்கு நின்றிருந்தால், எனது உணர்வுகள் கடுமை யாகத் தா க்கப்பட்டு, காயப்பட்டிருக்கும். அநேகமாக நான் ஆலோசனைச் சங்கத்தாரின் கைப்பாவையாகி, எனது குரலில் கோபம் எகிறியிருக்கும். ஆயினும், பேதுரு எப்படிப் பதிலளித்

தார் என்று கவனியுங்கள்: அப்பொழுது பேதுரு .... “ஜனத்தின் அதிகாரிகளே, மூப்பர்களே” (வ. 8; NIV). “ஜனத்தின் அதிகாரி களே, மூப்பர்களே” என்பது அக்கூட்டத்தை மரியாதையுடன் அழைக்கும் விதமாயிருந்தது. அது ஏறக்குறைய “மரியாதைக் குரிய தலைவர்களே மற்றும் நமது நாட்டின் மூப்பர்களே” என்று Kenneth N. Taylor கூறும் பொழிப்புரைக்கு ஒப்பானதாகும். பேதுரு தமது தற்காப்பு வாதத்தைத் தொடங்குகையில், பரிவுடன், பண்புடன் இருந்தார்! “ஆவியின் பட்டயமானது உப்பைத் தூவாமலேயே போதிய அளவு ஆழமாகப் பாயும்” என்று Jimmy Allen கூறினார். மற்றவர்களிடம் நாம் எப்பொழுதும் நற்பண்புடன் இருக்க வேண்டும் - இது அவர்கள் அப்படியிருக்க வேண்டும் என்பதற்காக அல்லாமல், நாம் அப்படி இருக்க வேண்டும் என்பதற்காகவே!

அடுத்த முறை சாத்தான் உங்களுக்குக் கடினமான நேரத்தைக் கொடுக்கும்போது, அநேகமாக நீங்கள் உங்கள் எதிராளியைப் போன்றே பெருந்தன்மையற்றும், வெறுப்பு நிறைந்தும் இருக்கும்படி சோதிக்கப்படலாம். இருப்பினும், இயேசு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டும்படி கூறினார் (மத். 5:39). சாத்தான் தன்னுடைய சட்டங்களின்படி செயல் படுவதற்காக உங்களை வஞ்சிக்காதபடிக் கவனமாயிருங்கள்!

## முடிவுரை

நமது அடுத்த பாடத்தில், “சாத்தான் உங்களுக்குக் கடின மான நேரத்தைத் தரும்போது” என்பதைத் தொடர்ந்து படிக்க லாம். ஆயினும், ஒருகணம் நாம் ஒவ்வொருவரும் நம்மையே சுயபரிசோதனை செய்துகொள்ள நிதானிப்போம்: “சாத்தான் எப்போதாவது எனக்குக் கடினமான நேரத்தைக் கொடுத்திருக் கிறானா? அப்படியிருந்தால் நான் எவ்விதம் செயல் புரிந்தேன்? நான் ஒரு கிறிஸ்தவனைப் போலச் செயல்பட்டேனா அல்லது நான் சாத்தானைப் போலச் செயல்பட்டேனா?’’ இதற்கு உங்கள் பதில் எதுவாக இருப்பினும், அடுத்தமுறை உங்களைச் சாத்தான் உபத்திரவப்படுத்தும்போது தேவனுடைய உதவியு டன் இருப்பவர்களாய் நீங்கள் செயலாற்ற வேண்டுமென்று தீர்மானம் செய்யுங்கள்.

## பிரசங்கக் குறிப்புகள்

*ரிச்சர்ட் ரோஜர்ஸ் அவர்கள் 4:1-31ல், "முதல் எதிர்ப்பு" என்ற ஒரு பிரசங்கத்தைத் தயார் செய்துள்ளார். அதில் நான்கு முக்கியக் கருத்துக்கள் உள்ளன: எதிர்ப்பு வெளிப்படுத்தப் பட்டது (4:1-7), எதிர்ப்பு சந்திக்கப்பட்டது (4:8-12), எதிர்ப்பு சமப்படுத்தப்பட்டது (4:13-22), எதிர்ப்பு குறைக்கப்பட்டது (4:23-31).*

---

குறிப்புகள்

[1]இயேசுவின் சிலுவை மரணத்தினால் அவன் கட்டுப்படுத்தப்பட்டுள்ளான் (வெளி. 12:11). அவனோ அல்லது அவனுடைய ஆவிகளோ புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் செய்ததுபோல மக்களை அவர்களின் விருப்பத்திற்கெதிராக ஆட்கொள்ள முடியாது, ஆனால் இது அவன் செயலற்றிருக்கிறான் என்றோ அல்லது பலமற்று இருக்கிறான் என்றோ பொருள்படாது. [2]மேசியாவைப்பற்றிய சங்கீதமாகிய, சங்கீதம் 2, வெளி. 12:5ல் அவரை விளக்கிக் கூறப் பயன்படுத்தப்படுவதன் மூலம் இதை நாம் அறிகின்றோம். [3]நடபடிகள் நூலில் சாத்தானைப்பற்றிய சில குறிப்புகளுக்கு, 5:3; 13:10; 26:18 ஆகியவைகளைக் காணவும். [4]இயேசுவின் நாமத்திற்குரிய முக்கியத்துவத்தைக் கவனியுங்கள் - நமது கடந்த பாடத்தில் உள்ள முக்கியத்துவம் இந்தப் பாடத்திலும் தொடரும். [5]வசனம் 3ல் உள்ள சொற்றொடரை இருபதாம் நூற்றாண்டின் புதிய ஏற்பாடு இவ்விதமாய்க் குறிப்பிடுகிறது, புரூஸ் அவர்கள் தமது விளக்கவுரை மொழிபெயர்ப்பில் இவ்விதமே செய்திருக்கிறார் (F.F. புரூஸ், *நடபடிகள் நூல், புதிய ஏற்பாட்டிற்கான உலகளாவிய புதிய விளக்கவுரை*, rev. ed. [கிராண்ட் ரேப்பிட், மிச்.: Wm. B. Eerdmans Publishing Co., 1989] 89). [6]புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்ற, எல்லாரும் ஒரே நேரத்தில் தேவைப்படாத அளவுக்கு ஏராளமான ஆசாரியர்கள் இருந்தனர். அவர்கள் இருபத்துநான்கு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதியும் ஒரு வார காலம் ஆலயத்தில் பணி புரிந்தனர் (லூக். 1:8ஐக் கவனியுங்கள்). தொடர் பணி அளிப்பதற்காக, சில ஆசாரியர்கள் ஆலய ஊழியத்தைக் கண்காணிப்புச் செய்ய நியமிக்கப்பட்டனர். இந்த ஆசாரியர்கள் "சாதாரண" ஆசாரியர்களைக் காட்டிலும் அதிக அதிகாரம் உடையவர்களாய் இருந்தனர்; இவ்விதமாய் அவர்கள் ''பிரதான ஆசாரியர்கள்'' என்று அறியப்பட்டனர். இந்த நியமங்களில் அரசியலின் தலையீடு இருந்தது. [7]தேவாலயம் கட்ட தாவீது தயாரிப்புகள் செய்தபோது, சில லேவியர்களை "வாசல் காக்கிறவர்களாக" (1 நாளா. 26:1-19) அவர் நியமித்தார். இது அவர்கள் வெறுமனே கதவுகளைத் திறந்து, மூடிக் கொண்டிருந்தனர் என்று பொருள்படாது. மாறாக, அவர்கள் தேவாலயத்தைக் ''காவல்'' செய்ய

வேண்டியிருந்தது; அவர்கள் ஒரு அமைதியான மற்றும் பயபக்தியான சூழ்நிலையைப் பராமரிக்க வேண்டியிருந்தது. “சேனைத் தலைவன்” என்பவர் இந்த “வாசல் காக்கிறவர்களின்” தலைவராயிருந்தார். பகல் நேரத்தில் ஒழுங்கைப் பராமரிப்பதும், இரவு நேரக் காவலுக்காக ஒவ்வொரு வாசலிலும் காவலர்களை நியமிப்பதும் இவரது பணியாக இருந்தது. லூக். 22:4, 52 “தேவாலயத்துச் சேனைத் தலைவர்கள் [பன்மை]” என்று கூறுகின்றன (KJV; லூக். 22:4, 52ல் உள்ள கிரேக்க வார்த்தையும் அப். 4:1ல் உள்ள கிரேக்க வார்த்தையும் ஒரே மாதிரியானவை). இது அவர்கள் பணிமுறை மாற்றத்தின்படி தேவாலயத்தின் மற்ற பணிகளைப் போலவே அலுவல் புரிந்ததைக் காட்டுகின்றது. இங்கும், இந்நியமனங்களில் அரசியல் தலையீடு இருந்தது. தேவாலயமானது அரசியல் ஊழலின் முக்கியக் களமாயிற்று. [8]பரிசேயர்களல்ல, சதுசேயர்களே சீஷர்களை எதிர்ப்பதில் முதன்மையாய் நின்றனர் என்பதைக் காண வியப்பாயுள்ளது. சதுசேயரோடு அல்ல மாறாக பரிசேயரோடுதான் இயேசு அநேக வழிகளில் முரண்பட்டார். இருப்பினும், அப்போஸ்தலர் களுடைய ஆரம்ப காலப் பிரசங்கங்கள் உயிர்த்தெழுதலை மையமாகக் கொண்டிருந்தது - பரிசேயர்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்பினர், ஆனால் அதை சதுசேயர்கள் நம்பவில்லையாதலால் (23:6-8) - சதுசேயர்கள் அதிகமாக இடறலடைந்தனர் என்பது இயல்பே. [9]இயேசுவைப் போலவே அதே பயமுறுத்தல் இவர்களாலும் எழுந்தது (யோவா. 11:45-53). [10]அப்போஸ்தலர்கள் இயேசுவின் சொந்த உயிர்த்தெழுதலைப்பற்றிப் பேசியபோது, அவர்களின் வார்த்தைகள் தனி நபருக்குரியதாகவும், குறிப்பிட்டதாகவும் இருந்தது: “அவரை தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்” (3:15). தனிநபருக்குரியதற்ற, பொதுவான வார்த்தைகளான “மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல்” என்ற வார்த்தைகள் பல விளக்கவுரையாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர் களைப் பின்வருமாறு முடிவெடுக்கச் செய்தது: அப்போஸ்தலர்கள் இயேசுவின் சரீர உயிர்த்தெழுதலில் இருந்து, நகர்ந்து, பொதுவான சரீர உயிர்த்தெழுதல் பற்றி பிரசங்கித்தனர் (1 கொரி. 15:20-29). புதிய நூற்றாண்டு வசனத்தில், “இயேசுவின் வல்லமையால் மக்கள் மரணத்திலிருந்து எழுப்பப்படுவார்கள் என்று அவர்கள் பிரசங்கித்துக் கொண்டிருந்தனர்” என்றுள்ளது. C.H. Rieu அவர்களின் நடபடிகளின் மொழிபெயர்ப்பில், “இயேசுவின் நிகழ்ச்சியை மேற்கோள் காட்டி மரித்தோரின் உயிர்த்தெழுதல்பற்றிய போதனையை நிரூபிக்க முயற்சி செய்தனர்” என்றுள்ளது.

[11]இயேசு மரணமடைவதற்குச் சில நாட்களுக்கு முன்பு, அவர்கள் அவரிடம் இத்தலைப்புபற்றி எதிர் விவாதம் செய்திருந்தனர் (மத். 22:23-33). [12]அமெரிக்க ஐக்கிய நாட்டில் “வேதாகம வட்டத்துக்குள்” இருப்பவர்கள் ஒரு கூட்டுக் குள்ளான வாழ்வில் இருக்கின்றோம். தேவனுடைய வார்த்தை இகழப்பட்டது என்று சிலர் கேள்விப்பட்டது கூட இல்லை. ஆயினும் உலக முழுவதுமான விதிக்கு இது ஒரு விதிவிலக்காகவே உள்ளது. [13]இது தேவாலயப் பகுதியில் உள்ள ஒரு அறையாக இருப்பதற்குச் சாத்தியக் கூறுண்டு. [14]பேதுருவின் பிரசங்கம் மாலை 3.00 மணியளவில் தொடங்கி, சாயங்கால நேரத்தில் (அநேகமாக 6.00 மணி) இடைமறிக்கப்பட்டது. நடபடிகளில் பிரசங்கங்களை லூக்கா சுருக்கக் குறிப்புகளாகக் கொடுத்துள்ளார் என்பதற்கு இது இன்னொரு ஆதாரமாகும். [15]எரேமியா 21:12ல் “ஒவ்வொரு காலை வேளையிலும்” நியாயம் விசாரித்தல் நடத்தப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. வாழ்வா சாவா என்ற

*பிரச்சனைகள் இரவு நேரத்தில் விசாரிக்கப்படக் கூடாது என்று யூதர்கள் ஒரு ஒழுங்கு முறை வைத்திருந்தனர் - இவ்வொழுங்கு முறை இயேசுவின் விஷயத்தில் ஒதுக்கித்தள்ளப்பட்டது (இவ்வொழுங்கு முறையை அவர்கள் தங்கள் நோக்கத்திற்கேற்றவாறு இருக்கும்போது மட்டுமே பயன்படுத்திக் கொண்டனர்). [16]"கரங்களைத் தூக்கியெறிந்து விடுதல்" என்பது "வெளியேறத் தயாராகுதல்" என்று பொருள்படும். [17]"விசுவாசம்" என்பது பரந்த பொருளில் பயன்படுத்தப்படும்போது "கீழ்ப்படிதல்" என்பதற்கு மாற்றாகப் பயன்படுத்தப் பட முடியும். எடுத்துக்காட்டாக, யோவான் 3:36ல், "குமாரனிடத்தில் விசுவாச மாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனுக்குக் கீழ்ப்படியாதவனோ (இது தமிழ் மொழிப்பெயர்ப்பில்: 'குமாரனை விசுவாசி யாதவனோ' என்றுள்ளது) ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலை நிற்கும்" என்றுள்ளது. இவ்விடத்தில் KJVயில் சுட்டிக் காட்டப்படாத போதிலும், இரு மாறுபட்ட கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. [18]நான் இவைகளை "இணைப்பு மனமாற்றங்கள்" என்று அழைக்கின்றேன். இதைக் குறித்துப் பிறகு நான் அதிகமாய்க் கூறுவேன். [19]இப்பாடத்தைப்பற்றிய சுருக்கக் குறிப்பான வசனங்களே நமக்குள்ளது, பேதுரு அவர்களிடம், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படிக் கூறியிருக்க வாய்ப்புண்டு, ஆனால் பிரசங்கப் பதிவின்படி அவர் அதைக் கூறவில்லை என்றாகிறது. [20]வேறு வார்த்தைகளில், anthropos என்பது "மனித இனத்தை" க் குறிக்கும்.*

*[21]பேதுருவின் முதல் பிரசங்கத்தின் விளைவாக மூவாயிரம் பேரும், இரண்டாவது பிரசங்கத்தின் விளைவாக இரண்டாயிரம் பேரும் இணைந்தனர் என்று நான் கூறுவதில்லை. 2:41ல் கூறப்பட்ட மூவாயிரம் பேரில் ஆண்களும், பெண்களும் இருந்தனர், இவ்விடத்தில் ஆண்கள் மட்டுமே ஐயாயிரம் பேர் இருந்தனர், ஆக கூடுதல் மட்டுமே இரண்டாயிரத்திற்குச் சற்று அதிகமா யிருந்திருக்க வேண்டும். பேதுருவின் பதிவு செய்யப்பட்ட இரண்டாவது பிரசங்கத்தின் விளைவாக எத்தனை பேர் ஞானஸ்நானம் பெற்றனர் என்று உறுதியாகத் துல்லியமாகக் கூற வழியேதும் இல்லை - ஆனால், யூதத் தலைவர் களுடைய எதிர்ப்புகள் இருந்தபோதிலும், திரளான மக்கள் கிறிஸ்தவர்களாகு மளவுக்கு பேதுருவின் பிரசங்கம் வல்லமையுள்ளதாயிருந்தது என்பதே லூக்காவின் கூற்றின்படி உறுதியானதாகும். இத்துடன் நாம் திருப்தியடைய வேண்டியது தான். [22]இந்நாட்களில் அநேக சபைகளில் ஆண்களைவிடப் பெண்களின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதால், இந்த மொத்த அளவு 15,000 - 20,000 என இருக்கலாம் என்று நினைக்கும்படி நாம் தூண்டப்படலாம். ஆயினும், சபையின் ஆதி வரலாற்றில், ஆண்களின் ஆதிக்கம் மேற்கொள்ளப்பட ஆயிரக்கணக்கான வருடங்கள் ஆயிற்று. கணவர் கிறிஸ்தவராகுமுன் அவர் மனைவி கிறிஸ்தவராயிருக்க வாய்ப்பில்லை. காலங்களானபோது இது மாறிற்று (1 பேது. 3:1, 2). [23]"வேதபாரகர்கள்" என்பதற்கு NIVயில் "நியாயப்பிரமாண போதகர்கள்" என்றுள்ளது. [24]4:15ல் "ஆலோசனை சங்கம்" என்ற வார்த்தை Sunedrion என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளது; NIVயில் இவ்வார்த்தை "Sanhedrin" என்ற மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. சொற்பொருளகராதியில் "Sanhedrin" - சனதெரீன் என்ற வார்த்தையில் காண்க. [25]அமெரிக்க ஐக்கிய நாட்டில் பாராளுமன்றமும், உயர் நீதிமன்றமும் அரசாங்கத்தின் சட்டமியற்றும் மற்றும் சட்டத்தை*

*நடைமுறைப்படுத்தும் பாகமாயிருக்கின்றன. உங்கள் நாட்டில் இதற்கொப்ப இருப்பவைகளை இவ்விடத்தில் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். (நமது நாட்டில் இதே நிலைதான் உள்ளது-மொழியாக்குநர்.) [26]இது பதவியில் இல்லாமலிருந்தாலும் ஒருவரை "ஜனாதிபதி" என்றழைப்பதைப் போன்றது அல்லது ஒரு இராணுவ அதிகாரி ஓய்வு பெற்ற பின்னரும் அவரை அவரது பதவியின் பெயர் கூறி அழைப்பது போன்றதாகும். [27]லூக். 3:2ஐக் கவனியுங்கள். இயேசு கைது செய்யப்பட்டபோது, இம்மனிதருடைய அதிகாரம் கையாளப்பட்டது, அவர்கள் "முதலாவது அவரை அன்னா என்பவனிடத் திற்குக் கொண்டு போனார்கள்" (யோவா. 18:13). [28]சில பழைய கைப்பிரதிகளில் "யோவான்" என்பதற்குப் பதில் "யோனத்தான்" என்றுள்ளது. அன்னாவின் மகனாகிய இந்த யோனத்தான் பின்னாளில் பிரதான ஆசாரியராக ஊழியம் செய்தார். [29]அப்போஸ்தலர்களின் காலத்தில், யூதர்களின் ஆசாரியத்துவ அமைப்பு முழுவதும் ஊழல்களினால் சிக்கலாக்கப்பட்டிருந்தது. நியாயப்பிரமாண அங்கிகாரத்தின்படி பிரதான ஆசாரியரை நியமிப் பதற்குப் பதிலாக, அப்பதவியானது பலத்தின் அடிப்படையில் கைப்பற்றப் பட்டது; பிரதான ஆசாரியர்கள் வந்து போயினர். ஆயினும் கூட, அடுத்தடுத்து வந்த பிரதான ஆசாரியர்கள் யாவரும் ஒரு சில குடும்பங் களுக்குள் இருந்தே வந்தனர். பலம் வாய்ந்த மற்றும் செல்வாக்குள்ள இந்தக் குடும்பங்களே "பிரதான ஆசாரியருடைய குடும்பத்தார்" என்னப்பட்டனர். [30]பாரம்பரியத்தின்படி, சனதெரீன் சங்கத்தில் எழுபத்தோரு உறுப்பினர் களும், அவர்களுடன் கூட பிரதான ஆசாரியரும் இருந்தனர்.*

*[31]பிரதான ஆசாரியருடைய குடும்பத்தார் "யாவரும்" கூடினர் என்பதை நினைவில் வையுங்கள். அத்துடன், நியாயாதிபதிகளைச் சுற்றிலும் "ஆலோசனைக் குழுவினராகப்" பணியாற்றிய இளைஞர்களான மற்ற மனிதர்களும் இருந்தனர். இவர்கள் "பயிற்சி பெறும் நியாயாதிபதிகள்" ஆவர். [32]வசனம் 14. ஒருவேளை நியாயசங்கத்திற்கு வரும்படி அவன் கட்டளை பெற்றிருக்கலாம், ஆனால் இது சாத்தியமற்றதாய்க் காணப் படுகிறது. ஒருவேளை இது யார் வேண்டுமானாலும் வரக்கூடிய ஒரு பொதுவான விசாரணையாய் இருந்திருக்கலாம், எனவே அவன் தன்னைக் குணப்படுத்தியவர்களோடு இருக்கும்படி அங்கு வந்திருக்கலாம். தனி விசாரனையின்போது அவன் பலவந்தமாக உள்ளே நுழைந்திருக்கலாம். எந்த விளக்கமும் முழு திருப்தியளிப்பதில்லை, இதை நமக்குச் சொல்லுவது அவசியம் என்று லூக்கா எண்ணவில்லை. குறிப்பிடத்தக்க உண்மை யென்னவென்றால், அவன் அங்கிருந்தான் - அது அந்த நியாயசங்கத்தை ஒரு இக்கட்டான சூழ்நிலைக்குள்ளாக்கிற்று (வ. 14). [33]சதுசேயர்கள், "அவர்கள் … இயேசுவை முன்னிட்டு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறதினால் சினம் கொண்டனர்" (வ. 1, 2), ஆனால் பேதுருவும் யோவானும் தவறான உபதேசத்தைப் போதித்தனர் என்று அவர்கள் குற்றம் சாட்ட முடியாதிருந்தது, ஏனெனில் சரீரத்தின் உயிர்த்தெழுதலைப் பரிசேயர்கள் விசுவாசித்தனர் - சனதெரீன் சங்கத்தில் வல்லமை பொருந்திய சில பரிசேயர்களும் உறுப்பினர்களாயிருந்தனர் (5:34ஐக் கவனியுங்கள்). [34]இவ்விதமாகவே பல மொழிபெயர்ப்பாளர்களால் கூறப்பட்டது.*